செ.வெ.எண். 575 நாள்.09.11.2017

**செங்கல்பட்டு தாலுக்கா மண்ணிவாக்கம் ஓடை, கூடுவாஞ்சேரி ஓடை கரைகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டார்.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த வடகிழக்குப் பருவ மழை காரணமாக தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்கிறது. தாம்பரம் கோட்டத்தில் அடையாறு ஆற்றை தூர்வாரி அகலப்படுத்திய காரணத்தால் தேங்கிய மழைநீர் விரைவாக வடிகிறது. இருப்பினும் சில பகுதிகளில் ஆக்கிரமிப்பு காரணமாக மழைநீர் வடிவதில் கால தாமதம் ஏற்பட்டு பொதுமக்களுக்கு சிரமம் ஏற்பட்டது.

அடையாறு ஆற்றில் கலக்கும் மண்ணிவாக்கம் ஓடை, கூடுவாஞ்சேரி ஓடை, நந்திவரம் ஏரி உபரிநீர் மற்றும் கூடுவாஞ்சேரி ஏரி உபரிநீர் கலக்கும் இடம், ஆகிய இடங்களில் ஓடைகளின் இருபக்க கரைகளிலும் கடைகள் மற்றும் வீடுகள் கட்டப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. வருவாய்த்துறையின் ஆவணத்தின்படி அளவிடப்பட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ள இடங்கள் கண்டறியப்பட்டு அடையாளக் குறியிடு இடப்பட்டு ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. மண்ணிவாக்கம் ஓடையின் இரு கரைகளிலும் உள்ள ஆக்கிரமிப்புகள் ஜே.சி.பி இயநதிரம் மூலம் அகற்றும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர பார்வையிட்டார். பின்னர், கூடுவாஞ்சேரி ஓடையின் இருகரையிலுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணியையும், ஆதனூர் - கூடுவாஞ்சேரி சாலை, நந்திவரம், கூடுவாஞ்சேரி ஏரிகளில் உபரிநீர் கலக்கும் இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணியையும் மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர், ஆறுகள், ஓடைகள் மற்றும் வடிகால்களின் கரைகளில் ஆக்கிரமிப்புகள் இருந்த காரணத்தால் தேங்கியுள்ள மழைநீர் வடிவது காலதாமதமானது ஆக்கிரமிப்புகள் வருவாய்த்துறை அலுவலகத்திலுள்ள கணக்கின்படி அளவிடப்பட்டு அடையாள குறிய்டு இடப்பட்டு அகற்றப்படுகின்றன. ஆக்கிரமிப்புகளினால் வீடுகளை இழந்தவர்களுக்கு குடியிருக்க மாற்று இடம் வழங்கப்பட்டு அங்கு குடியமர்த்தப்படுவார்கள் என தெரிவித்தார். நன்மங்கலம் ஊராட்சி மணிகண்டன் நகரில் நன்மங்கலம் ஏரி உபரிநீர் செல்லும் கால்வாயின் கரைகளில் ஆக்கிரமிக்கப்பட்ட இடங்கள் அடையாளமிடப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டார். ஏரியிலிருந்து வெளியேறும் தண்ணீரின் அளவு குறித்து பொதுப்பணித்துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு சார் ஆட்சியர் திரு.ஜெயசீலன் இ.ஆ.ப, வருவாய்த்துறை, பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்சசித்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**காஞ்சிபுரம்.**